# DEPOSITION OF WITNESS
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC 73/2018

**Sessions**

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | எ.தா.சா.1. | **Caste** | |
| **NAME** | **சண்முகப்பிரியா** | **Calling** | |
| **Father's Name** | **ரதூல்முகம்மது** | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 3-12-2021

**( சாட்சி Crmp. 5972 /2021 12-11-21 ஆம் தேதிய உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார். )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

**வாதி எனது பள்ளி காலத்து தோழி' என்று சொன்னால் சரிதான். வாதியின் கணவரும் எனக்கு நன்கு தெரியும். நான் வாதியின் கணவர் குமரேசனிடம் அவ்வப்போது பணம் கடனாகப் பெற்று திருப்பிச் செலுத்துவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. நான் நடத்தி வந்த இறைவன் ஏஜென்ஸீஸ் நிறுவனத்திற்கு நான் தான் உரிமையாளர் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1. காசோலை எனக்கு எனது வங்கியிலிருந்து கொடுக்கப்பட்ட காசோலை என்று சொன்னால் சரிதான். அந்தக் காசோலையை நான் எனது இறைவன் ஏஜென்சீஸ் நிறுவனத்திற்காக பயன்படுத்தி வந்த வங்கி காசோலை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1. காசோலையில் உள்ள வங்கி எனது இறைவன் ஏஜென்சீஸ் நிறுவனத்திற்காகத்தான் துவங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1. காசோலை நான் வாதியிடம் 9-3-2018 அன்று வாங்கிய ரூபாய் 8,70,000 க்கு வழங்கப்பட்ட காசோலை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 குறிப்புரையில் காசோலையானது போதிய பணம் இல்லையென்னும் காரணத்திற்காகத்தான் திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எட், படித்துள்ளேன். வா.சா.ஆ. 3 ஆவணம் எனது கையெழுத்து கிடையாது என்ற**

காரணத்திற்காக திருப்பப்படவில்லையென்றால் சரிதான். நான் சொல்வது போல் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது என்றோ, இறைவன் ஏஜென்சீஸ் நிறுவனம் 2016 ல் முடிந்து விட்டது என்றும் சொல்வதற்கு வாதிக்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லையென்று சொன்னால் சரிதான். நான் 2016 ல் இறைவன் ஏஜென்சீஸ் நிறுவனம் முடிக்கப்ட்டதாகச் சொல்வதற்கு அதன் வங்கி கணக்குகளை இதுவரை முடிக்கவில்லையென்று ்சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1. காசோலையை நான் வாதியிடம் கொடத்த காலத்தில் இறைவன் ஏஜென்சீஸ் செயல்பட்டு வந்ததால் தான் வங்கி கணக்கை முடிக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் கணவர் குமரேசனிடம் திருப்பிச் செலுத்தியதாகச் சொல்லும் தொகைகளானது நான் குமரேசனிடம் வாங்கிய தொகைகளை தான் திருப்பிச் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.த.சா.ஆ.1. முதல் 3 செலுத்துகை சீட்டில் கண்டுள்ள தொகைகள் நான் வாதியின் கணவரிடம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கு கொடுத்த தொகைகள் என்று சொன்னால் சரியல்ல. எதாசா ஆ 1 முதல் 3 உள்ள தொகைகள் நான் வாதிக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் கணவர் குமரேசனிடம் கொடுத்தாகச் சொல்லும் 5 காசோலைகளை மற்றும் புரோநோட்டுக்களை திரும்ப பெறுவதற்கு போலீசில் புகாரோ , வழக்கறிஞர் அறிவிப்போ, அனுப்பவில்லையென்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் வாதியின் கணவர் குமரேசனிடம் காசோலைகள் மற்றும் புரோ நோட்டுகள் கொடுக்காததால் தான் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் கடன் பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்து விட்டு தற்போது வாதியை மோசடி செய்வதற்காக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது என்று சொல்வதற்கு நான் தான் நிரூபிக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எ.தா.சா.ஆ.2 ஜெகநாதன் என்பவர் எனது நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நான் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.